Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.II. TIRUPATTUR
Case No CC.No.264/2025, Cr.No.83/2025, Kandili PS
DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No.1, Page.No.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திருப்பதி | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | லிங்கண்ணன் | தொழில் | ஓட்டுநர் |
| கிராமம் | எலவம்பட்டி | மதம் | |
| மாவட்டம் | திருப்பத்தூர் | வயது | 37 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 11th day of August 2025.

சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>முதல் விசாரணை</u> (எதிரிகள் ஆஜர்)

ஆஜர் எதிரிகள் இருவரும் என்னுடைய பக்கத்து நிலத்துக்காரர்கள். கடந்த 02.04.2025 அன்று மதியம் என்னுடைய நிலத்தில் நான் தண்ணீர் பாய்ச்சிக் கொண்டிருந்த போது சிவகாமியம்மாள் பழுப்பில் தண்ணீரை அவரது நிலத்திற்கு திருப்பினார். இதுகுறித்து நான் கேட்டபோது "நான் அப்படி தான் திருப்புவேன் என்று கூறியதால் நான் வீட்டிற்கு வந்து விட்டேன். அன்று இரவு 07.30 மணியளவில் நான் வீட்டின் வெளியே கட்டிலில் படுத்துக்கொண்டிருந்த போது ஆஜர் எதிரிகள் வந்து என் அம்மாவிடம் "எங்கு சென்று விட்டான் அந்த தேவிடியா பையன்" என்று என்னை கேட்டு விட்டு என் அம்மாவின் கழுததை பிடித்து வெளியே தள்ளிவிட்டு வீட்டின் உள்ளே நுழைந்து கத்தியால் என்னை வெட்ட முயன்ற போது நான் தடுக்கவே என்னுடைய இடது கைவிரல்களில் வெட்டுக்காயமும், வலது நெற்றியில் வெட்டுக்காயமும், வலது மார்பில் வெட்டுக்காயமும் முதுகில் வெட்டுக்காயமும், இரு கால் மூட்டுகளிலும் வெட்டுக்காயம் ஏற்பட்டது. பின்னர் என் அம்மா கூச்சல் சத்தம் கேட்டு அருகிலிருந்த விஜயா, பரிமளா, மல்லிகா, முரளி, தருமன் ஆகியோர் அங்கு வரவே எதிரிகள் அங்கிருந்து தப்பியோடிவிட்டனர். பின்னர் 108 ஆம்புலன்ஸ் மூலம் என்னை திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பினர். பின்னர் மேல்சிகிச்சைக்காக கிருஷ்ணகிரி மற்றும் தருமபுரி

மருத்துவமனைகளுக்கு அனுப்பி வைத்தார்கள். நான் 20 நாட்கள் தருமபுரி அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்தேன். நான் திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்த போது கந்திலி போலீசார் என்னை விசாரித்து புகார் வாக்குமூலம் பதிவு செய்தார்கள். என்னிடம் காட்டுப்படும் புகார் வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் என்னுடையது தான். **அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது குறித்து போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-**

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். வாய்ப்பு வழங்கப்பட்டது குறுக்கு விசாரணை செய்யாததால் குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.

**மறுவிசாரணை :- இல்லை**

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

JUDICIAL MAGISTRATE NO.II

KOVENDHAN S

Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: TIRUPATHUR

Judicial Magistrate No.II,
Tirupathur.